# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மதுவரி (திருத்தம்)

**(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *213 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2:*** *இவ்வாசகம், (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தென்னை மரங்களிலிருந்து கள்ளிறக்குவதற்கான உரிமங்களைப் பெறுதல் தொடர்பில் விலக்களிப்பை வழங்குவதுமாகும்.*

ச.வ.ஓ–8/2013

## (52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொருசட்டம்

இலங்கைச்சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2012, நவம்பர் 08 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

52 ஆம் அத்தியாயத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 15 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஆ) என்னும் பந்தியில்,“கித்துள் மரத்தையும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “கித்துள் மரத்தையும் தென்னைமரத்தையும்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (இ) என்னும் பந்தியில்,“கித்துள் மரத்தையும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக,“கித்துள் மரத்தையும் தென்னைமரத்தையும்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்